



தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் மேற்கு ஒன்றியம், அரசநத்தம் ஊராட்சியில் திராவிடப் பொங்கல் திருநாள் கபடி போட்டியை கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் எம்.பி, தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தே.மலையரசன் எம்.பி., ஒன்றிய செயலாளர்கள் இரா.வரதராஜன், டாக்டர் வே.செழியன், சசிகுமார், பழனிவேல், பார்த்திபன், கார்த்திக் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### ஒன்றிய – நகரம் அளவில் விளையாட்டுப் போட்டிகள்

## சேலம் கிழக்கு மாவட்டத்தில் திராவிடப் பொங்கல் - சமூக நீதிக்கான திருவிழா!

### மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., அறிவிப்பு!

சேலம், ஜன. 6 –

சேலம் கிழக்கு மாவட்டம் வாழப்பாடி உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் க.சுரேஷ்குமார், கு.சின்ன துரை, மாவட்ட பொருளாளர் ஆர்.வி.ஸ்ரீராம், செயற்குழு , பொதுக்குழு உறுப்பினர்கள் மனோகரன், சங்கர், முத்துலிங்கம், சோமசுந்தரம், தமிழ்ச்செல்வன், ரேகா பிரியதர்ஷினி, ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றியச் செயலாளர்கள் வெண்ணிலா சேகர், மாணிக்கம், உமாசங்கர், சதீஷ்குமார், விஜயகுமார், ரத்தினவேல், ராஜேந்திரன், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி, சிவராமன், மருதமுத்து, டாக்டர் செழியன், வரதராஜன், சித்தார்த்தன், பழனிசாமி, அழகு வேல், பாலமுருகன், நகர செயலாளர்கள் வேல்முருகன், பாலசுப்பிரமணியம், ராமச்சந்திரன், தொகுதி மேற்பார்வையாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழகத் தலைவர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 31.12.2025 அன்று உடன்பிறப்புகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில்

**திராவிடப் பொங்கல்**
**சமூக நீதிக்கான திருவிழா**
**கொண்டாட்டம்!**

தமிழர் திருநாளான பொங்கல் திருவிழாவை யொட்டி மாநிலம் முழுவதும் கழகத்தின் சார்பில் மூன்று கட்டங்களாக பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி, பரிசுப்பொருட்களை வழங்கிட வேண்டும் என அறிவித்துள்ளார்.

அதன்படி வருகின்ற ஜனவரி 3 ஒன்றியம், நகரம் அளவிலான விளையாட்டுப் போட்டிகள்

ஒருங்கிணைந்த ஒன்றியம் ஒருங்கிணைந்த நகரம் அளவில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை ஜனவரி 3ஆம் தேதி தொடங்கி ஜனவரி 9 வரை நடத்திட வேண்டும்

கிரிக்கெட் வாலிபால், கபடி கால்பந்தாட்டம் ஓட்டப்பந்தயம், மிதி வண்டிப் போட்டி கோகோ என ஆண் பெண் இருபாலருக்கும் தனித்தனியாக ஒவ்வொரு பிரிவினருக்கும் குறைந்தபட்சம் தலா போட்டிகளை நடத்திட வேண்டும்.

அதன்பிறகு ஜனவரி/ கழக மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள்:

ஒன்றிய நகர அளவில் வெற்றி பெற்ற அணிகளைக் கொண்டு கழக மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை ஜனவரி 10ஆம் தேதி தொடங்கி பொங்கல் திருவிழா வரை நடத்தி பரிசுகளை வழங்கிட வேண்டும்

மாநில அளவிலான போட்டிகள் மாவட்ட அளவில் வெற்றி பெறும் அணிகளைக் கொண்டு பிப்ரவரி மாதத்தில் மாநில அளவிலான பிரமாண்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்.

இப்போட்டிகளை அனைத்து ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்களும் சார்பு அணியினரும் இணைந்து எழுச்சியோடு நடத்திட வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது.

**“திராவிடப் பொங்கல்”**

ஜனவரி 14, 15 தேதிகளில் தமிழ்நாடு முழுவதும் ஊராட்சிகள் மற்றும் வார்டுகள் அளவில் மகளிரைத் திரட்டி சாதி, மத, ஏற்றத்தாழ்வு பேதமற்ற திராவிடப் பொங்கல் வைத்து கொண்டாடப்பட வேண்டும்

அனைத்து வீடுகள் முன்பும் ‘சமத்துவம் பொங்கட்டும்; தமிழ்நாடு வெல்லட்டும்’ என எழுதி திராவிடப் பொங்கல்’ கோலமிட்டு, பெண்கள் குழந்தைகளுக் கான கோலப்போட்டிகள் உள்ளிட்ட சிறு சிறு விளையாட்டுப் போட்டிகளை நடத்திட வேண்டும்

**ஜனவரி 16 & 17 தேதிகளில்**

உழவர் திருநாள் காணும் பொங்கல் கலை இலக்கியத்தின் வாயிலாக திராவிட மாடல்

மக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடிடும் வகையில் ஊரில் பொதுவான இடத்தில் கலை நிகழ்ச்சிகளை நடத்தி, திரை அமைத்து முதலமைச்சர் அவர்களின் சிறப்புச் செய்தியுடன் கூடிய திரைத்திருவிழாவை நடத்திட வேண்டும்.

இந்நிகழ்ச்சிகளை அனைத்து ஒன்றிய நகர கழகச் செயலாளர்களும், சார்பு அணியினரும் இணைந்து எழுச்சியோடு நடத்தி திராவிடப் பொங்கல் கொண்டாட்டங்களை வெற்றியடையச் செய்திட வேண்டு மென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட கோவை மாநகர் மாவட்ட பகுதி மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் கோவை மாநகர் மாவட்டக் கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழக துணை செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அன்னம்மாள், மாவட்ட மகளிர் தொண்டர் அணி கனிமொழி, மகளிர் அணி தலைவர் தீபா, மகளிர் தொண்டர் அணி தலைவர் சாந்தாமணி, துணை தலைவர் மீனாட்சி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவண்ணாமலை முருகையன்
### சனவரி 6 (2003)



**திருவண்ணாமலையில் திராவிடர் கழகத்தினைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர். தொடக்கக் காலத்திலிருந்து கழக உறுப்பினராக இருந்தவர்.**

**வடஆற்காடு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**மூன்று முறை தொடர்ந்து சட்டப்பேரவை உறுப்பினராகப் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். 1980ல் திருப்பத்தூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கழகத்தின் சார்பில் நடைபெற்ற பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### திருச்சி தெற்கு மாவட்டத்தில்

## திராவிடப் பொங்கல் - சமூக நீதிக்கான திருவிழாக் கொண்டாட்டம் !

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு !



*திராவிட பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் 31.12.2025 அன்று கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கழக உடன்பிறப்புகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அறிவிப்புக்கிணங்க,*

*திருச்சி தெற்கு மாவட்டத்தில் மாநகர, பகுதி, ஒன்றிய, நகர,பேரூர் கழகங்களில் விளையாட்டு போட்டிகள் கீழ்கண்ட அட்டவணைப்படி 14/01/2026 வரை நடைபெறும். கலந்து கொள்ளும் அனைத்து அணிகளும்,* **www.dravidapongal.in.** *என்ற இணையதளத்தில் பதிவு செய்திட வேண்டும். 14.01.2026 தேதிக்குள் அனைத்து போட்டிகளும் முடிக்க வேண்டும்.*

*ஜனவரி 14,15 ஆம் தேதி திருச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் ஊராட்சி, வார்டு, வட்டம் அளவில் மகளிர்களை திரட்டி, திராவிட பொங்கல் வைத்து கொண்டாடப்பட வேண்டும் அனைத்து வீடுகளிலும் முன்பு "சமத்துவம் பொங்கட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்" என எழுதி திராவிட பொங்கல் கோலமிட்டு பெண்கள் குழந்தைகளுக்கான கோலப்போட்டிகள் உள்ளிட்ட சிறு சிறு விளையாட்டுப் போட்டிகளை நடத்திட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

| வ.எண் | நாள் | பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் | தலைமை | போட்டிகள் | போட்டியை துவக்கி வைப்போர் |
|---|---|---|---|---|---|
| 1 | 07.01.2026 | மார்க்கெட் பகுதி | RG.பாபு | கால்பந்து போட்டி | ஆர். மணிமேகலை |
| 2. | 07.01.2026 | காட்டூர் பகுதி | O.நீலமேகம் | கால்பந்து போட்டி | ஆறு. சந்திர மோகன் |
| 3. | 07.01.2026 | மருங்காபுரி வடக்கு ஒன்றியம் | C.செல்வராஜ் | கபாடி போட்டி | என்.கோவிந்தராஜ் |
| 4. | 08.01.2026 | பாலக்கரை பகுதி | T.P.S.S.ராஜ் முஹம்மது | கால்பந்து போட்டி | எம். தமிழ்செல்வம் |
| 5. | 08.01.2026 | திருவெறும்பூர் பகுதி | S.சிவக்குமார் | கால்பந்து போட்டி | கே.கே.கே. கார்த்திக் |
| 6. | 08.01.2026 | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | V.A.ராஜேந்திரன் | கபாடி போட்டி | கே. சண்முகம் |
| 7. | 09.01.2026 | கலைஞர் நகர் பகுதி | G.மணிவேல் | கால்பந்து போட்டி | பொன்.செல்லையா |
| 8. | 09.01.2026 | கூத்தைப்பார் பேரூர் | M.RT.P.K.தங்கவேல் | கிரிக்கெட் போட்டி | எஸ். பன்னீர்செல்வம் |
| 9. | 09.01.2026 | பொன்னம்பட்டி பேரூர் | K.A.நாகராஜ் | கிரிக்கெட் போட்டி | எம்.மாரியப்பன் |
| 10. | 10.01.2026 | அரியமங்கலம் பகுதி | A.M.G.விஜயகுமார் | கால்பந்து போட்டி | பி.ஏ. நூர்கான் |
| 11. | 10.01.2026 | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | C.கங்காதரன் | கபாடி போட்டி | வண்ணை அரங்கநாதன் |
| 12. | 10.01.2026 | மருங்காபுரி மத்திய ஒன்றியம் | M.பழனியாண்டி | கபாடி போட்டி | லீலா வேலு |
| 13. | 10.01.2026 | மணப்பாறை நகரம் | மு.ம.செல்வம் | கிரிக்கெட் போட்டி | இரா. மூக்கன் |
| 14. | 11.01.2026 | மாநகர கழகம் | மு.மதிவாணன் | சைக்கிள் போட்டி | அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி |
| 15. | 11.01.2026 | துவாக்குடி நகரம் | E.காயாம்பு | கிரிக்கெட் போட்டி | V.தனசேகரன் |
| 16. | 11.01.2026 | மணப்பாறை ஒன்றியம் | C.ராமசாமி | கபாடி போட்டி | கவிஞர் சல்மா |
| 17. | 12.01.2026 | மலைக்கோட்டை பகுதி | R.மோகன் | கால்பந்து போட்டி | உ.ராஜேஸ்வரன் |
| 18. | 12.01.2026 | பொன்மலை பகுதி | E.M.தர்மராஜ் | கால்பந்து போட்டி | கே.சி.பழனிச்சாமி |
| 19. | 12.01.2026 | வையம்பட்டி வடக்கு ஒன்றியம் | R.சீரங்கன் | கபாடி போட்டி | இரா. குணசேகரன் |
| 20. | 13.01.2026 | மருங்காபுரி தெற்கு ஒன்றியம் | C.சின்னடைக்கன் | கபாடி போட்டி | பி.எம்.சபியுல்லா |
| 21. | 14.01.2026 | திருவெறும்பூர் வடக்கு | K.S.M.கருணாநிதி | கபாடி போட்டி | கே.என்.சேகரன் |
| | | ஒன்றியம் | | | |
| 22. | 14.01.2026 | மாவட்ட கழகம் | மாவட்ட செயலாளர் | வாலிபால் | அமைச்சர் ஆர். காந்தி |

*மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தொண்டர்கள் என அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி,**
**பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்,**
**மாவட்ட கழக செயலாளர்,**
**திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.**



துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநில விவசாய தொழிலாளர் அணி துணை தலைவர் த.சந்திரசேகரன் ஏற்பாட்டில் கழக விவசாய தொழிலாளர் அணி, கலைஞர் தமிழ்ச்சங்கம் புதுக்கோட்டை, மற்றும் புதுக்கோட்டை மாவட்ட கால்பந்தாட்ட கழகம் இணைந்து நடத்தும் மாபெரும் ஐவர் கால்பந்துப் போட்டியை புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர், புதுக்கோட்டை வடக்கு மாநகர பொறுப்பாளர் எம்.லியாகத் அலி துவங்கி வைத்தார். உடன் புதுக்கோட்டை தெற்கு மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஷ், மாமன்ற உறுப்பினர் இராசு.சந்தோஷ் மற்றும் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கலந்து கொண்டு சிறப்பித்தனர்.